செ.வெ.எண்: 43 நாள்:26.12.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் சுமார் ரூ.2.20 இலட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ,ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ,ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (26.12.2016) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்டஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி கூறியதாவது.

பொதுமக்களின் குறைகளை மனுக்களாக பெற்று தீர்வு காணும் நோக்கத்தில் மாவட்டந்தோறும் ஒவ்வொரு திங்கட்கிழமையும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் பட்டா மாறுதல் கோரி 9 மனுக்களும், இலவச வீட்டு மனை பட்டா வேண்டி 33 மனுக்களும், புதிய குடும்ப அட்டை கோரி 15 மனுக்களும், காவல்துறை நடவடிக்கைக்காக 11 மனுக்களும், வேலைவாய்ப்பு கோரி 30 மனுக்களும், பசுமை வீடு/சாலை வசதி/ குடிநீர்வசதி கோரி 33 மனுக்களும், கல்வி உதவித்தொகை கோரி 3 மனுக்களும், முதியோர் உதவித்தொகை கோரி 28 மனுக்களும், ஆக்கிரமிப்பு அகற்றுதல் தொடர்பாக 12 மனுக்களும், இதர கோரிக்கைக்காக 131 மனுக்களும் என மொத்தம் 305 மனுக்கள் பெறப்பட்டு சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு வழங்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 3 பயனாளிகளுக்கு தலா ரூ.4560 என மொத்தம் ரூ.13680 மதிப்பில் விலையில்லா சலவை பெட்டிகளும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையில் 12ம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெற்ற 10 மாணவ, மாணவிகளுக்கு ரூ.36000 மதிப்பில் பரிசுத்தொகைக்கான காசோலைகளும், சிறுபான்மையினர் நலத்துறையின் மூலம் 12ம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெற்ற 5 மாணவ, மாணவிகளுக்கு ரூ.22000 மதிப்பில் பரிசுத்தொகைக்கான காசோலைகளும், 10ம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெற்ற 11 மாணவ, மாணவிகளுக்கு ரூ.16000 மதிப்பில் பரிசுத்தொகைக்கான காசோலைகளும், மாவட்ட வழங்கல் அலுவலகம் சார்பில் 17 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 7 பயனாளிகளுக்கு தலா ரூ.3800 என மொத்தம் ரூ.26600 மதிப்பில் விலையில்லா தையல் இயந்திரங்களும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாற்றுத்திறனாளிகள் நல வாரியம் மூலம் செயல்படுத்தப்படும் சமூகப்பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 3 பயனாளிகளுக்கு தலா ரூ.17000 என மொத்தம் ரூ.51000 மதிப்பில் ஈமச்சடங்கு நிதியுதவி தொகைக்கான காசோலைகளும், 1 மாற்றுத்திறனாளிக்கு ரூ.5000 மதிப்பில் மடக்கு சக்கர நாற்காலியும், பேரிடர் மேலாண்மை பிரிவின் கீழ் கறம்பக்குடி தாலுகா, மாங்கோட்டை வட்டம், தெற்குப்பட்டி கிராமத்தில் திரு.செல்வராஜ் என்பவரது மகள் பாண்டிமீனா என்பவர் 7.9.2015 அன்று தீவிபத்து ஏற்பட்டு இறந்ததை தொடர்ந்து அவரது தந்தைக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியின் கீழ் ரூ.50000 மதிப்பில் நிதியுதவி தொகைக்கான காசோலையும், 2 பயனாளிகளுக்கு மாற்றுத்திறனாளி உதவித்தொகைக்கான ஆணைகளும், புதுக்கோட்டை நகர நிலவரித்திட்டத்தின் சார்பில் 30 பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டு மனைப்பட்டாக்களுக்கான ஆணைகளும் என மொத்தம் ரூ.2,20,280 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திரு.அன்பழகன், மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.பஞ்சவர்ணம், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.சிதம்பரம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**